# பொள்ளாச்சி நகராட்சி

## அவசரக் கூட்டம்

### 11.04.2022 தேதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகரமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகரமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | சொத்துவரி, காலிமனைவரி 01.04.2022 முதல் வரி சீராய்வு செய்வது குறித்து தமிழக அரசால் ஆணையிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.1960/2022/அ1** | **தீர்மானம் எண்.24**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| 2 | தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரை செய்துள்ளது.<br>15-வது மத்திய நிதி ஆணையம், 2022-2023-ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்துவரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br>அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்துவரி / காலிமனைவரி பொது சீராய்வு | **தீர்மானம் எண்.25**<br>**1) அனுமதிக்கப்பட்டது..**<br>**2) 8-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.S.P.வசந்த் ஆட்சேபனை தெரிவித்தார்.**<br>**3) 19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.T.ஜேம்ஸ்ராஜா ஆட்சபேனை தெரிவித்தார்.** |

மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019-ன் படி சொத்துவரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது.

மேலும் இக்குழுவானது சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாக செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15-வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகளில் கீழ்கண்டவாறு சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சி பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள்

அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சொத்துவரி**

**குடியிருப்பு கட்டடங்கள் (Residential Buildings)**

| பரப்பளவு(ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| <=600 | **1.25** |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்**

**(Non-Residential Buildings)**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்பந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
2. 601 முதல் 1200 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100%

சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

5. வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போது உள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
6. தொழிற்சாலை பயன்பாட்டுக் கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிக் கட்டடங்களுக்கு தற்போது உள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

**<u>காலிமனைவரி சீராய்வு</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100% உயர்வு செய்து கலிமனைவரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு **<u>இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள</u>** காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்து வரி சீராய்வு</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில் ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனைவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொது மக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொது மக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தி

உள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், பொள்ளாச்சி நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1. 600 சதுரடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5. வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போது உள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6. தொழிற்சாலை பயன்பாட்டுக் கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிக் கட்டடங்களுக்கு தற்போது உள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100% உயர்வு செய்து காலிமனைவரி பொது சீராய்வு செய்யலாம்.
8. ஏற்கனவே உள்ள சொத்துவரி/காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின்(GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/காலிமனைவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது மக்களுக்கு சொத்துவரி சீராய்வு குறித்து தினசரி நாளிதழ் மூலம் அறிவிப்பு செய்திடவும், அரசிதழில் வெளியிடுவதற்கும் ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1960/2022/அ1** | |
| 3 | பொள்ளாச்சி நகராட்சி தேர்வு நிலையிலிருந்து தரம் உயர்த்தப்பட்ட சிறப்பு நிலை நகராட்சியாக 1984 முதல் இயங்கி வருகிறது. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத் திடக்கழிவு_மேலாண்மை பணிகள், வடிகால் பணிகள், பாதாள சாக்கடை பணிகள், தெரு விளக்கு பணிகள், குடிநிர் விநியோகப்பணிகள் சாலை மேம்பாட்டு பணிகள், அத்தியாவசிய பணிகள், கட்டிட பணிகள் மற்றும் ஆக்கிரமைப்பு பணிகள் ஆய்வு செய்ய நகர்மன்றத் தலைவர், நகராட்சி பொறியாளர், பொது சுகாதார அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர் கள ஆய்வு செய்யவும் நகர் மன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் புகார்கள் உடனுக்குடன் பொது மக்களிடமிருந்து புகார் வராதவண்ணம் சுனக்கம் இன்றி பணி செய்திடவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்திற்கு மேற்கண்ட அலுவலர்கள் செல்ல வேண்டி இருப்பதாலும் மேற்கண்ட பிரிவு அலுவலர்களுக்கு தனித்தனியே வாகனம் தேவைப்படுகிறது. எனவே, தற்பொழுது இந்நகராட்சியில் பயன்படுத்தி வரும் வாகனம் (TN 41 AA7544 - மகேந்திரா பொலிரோ ஜீப், TN 41 T 2983 - மகேந்திரா பொலிரோ ஜீப், TN 41 M 1616 - மகேந்திரா பொலிரோ ஜீப், TN 41 AB 7878 - அம்பாசிடர் கார்) ஏற்கனவே 12 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால், தற்போது இந்நகராட்சிக்க புதிய 4 ஈப்பு வாகனம் கொள் முதல் செய்ய ரூ.55.00 (ஐம்பத்தைந்து இலட்சம்) இலட்சத்திற்கும் மற்றும் கூடுதலாக ஏற்படும் செலவினத்திற்கும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1864/2022/இ1** | **தீர்மானம் எண்.26**<br>**1) அனுமதிக்கப்பட்டது.**<br>**2) 7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் செல்வி.க.நர்மதா ஆட்சேபனை தெரிவித்தார்.**<br>**3) 8-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.S.P.வசந்த் ஆட்சேபனை தெரிவித்தார்.**<br>**4) 19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்திரு.T.ஜேம்ஸ்ராஜா ஆட்சேபனை தெரிவித்தார்.** |
| 4 | பொள்ளாச்சி நகராட்சியின் நல்லூர் கிராமத்தில் உள்ள நகராட்சி குப்பைக் கிடங்கில் மொத்தமுள்ள 16 ஏக்கரில் 11 ஏக்கரில் BIO MINING பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 5 | **தீர்மானம் எண்.27**<br>**1) அனுமதிக்கப்பட்டது..** |

<table>
<tr>
<td></td>
<td>ஏக்கரில் ஒரு பகுதி SECURITY SHED மற்றும் IL & FS LTD நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்ட SHED ஆகியன உள்ளன. மீதமுள்ள இடத்தில் நாள்பட்ட கழிவுகள் பரவலாக குவிந்துள்ளது. திடக்கழிவு மேலாண்மைப் பணிகளில் கையாள இயலாத வாழைத்தண்டு, மரக்கழிவுகள் INERTS மற்றும் சாக்கடை தூர்வாரப்படும் போது சேகரிக்கப்படும் கழிவுகள் ஆகியவற்றினை அப்புறப்படுத்த இயலாத வண்ணம் DUMPING YARD நிறைந்துள்ளது. மேலும் வெயில் காலங்களில் குப்பைக் கிடங்கில் தீ விபத்து ஏற்படும் பட்சத்தில் மொத்த நகராட்சி குப்பைக் கிடங்கிற்கு பரவாமல் தடுக்க தற்சமயம் பரவலாக நிறைந்துள்ள கழிவுகளை மழைப்போல் குவியலாய் குவித்து வைத்திடவும், தீ தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் வண்ணம் இடவசதி ஏற்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே இப்பணிகளை தனியார் JCB, TIPPER, HITACHI ஆகிய வாகனங்கள் மூலம் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,00,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரப் பிரிவின் அவசியம் கருதி பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்- எச்2/1849/2022</td>
<td>2) 7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் செல்வி.க.நர்மதா ஆட்சேபனை தெரிவித்தார்.<br>3) 8-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.S.P.வசந்த் ஆட்சேபனை தெரிவித்தார்.<br>4) 19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.T.ஜேம்ஸ்ராஜா ஆட்சேபனை தெரிவித்தார்.</td>
</tr>
<tr>
<td>5</td>
<td>பொள்ளாச்சி நகராட்சியில் நகரமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, மேலும் பொதுமக்களிடம் இருந்து அடிப்படை வசதிகளை மேம்படுத்த பெறப்படும் விண்ணப்பத்தின் மூலம் நகராட்சிப் பகுதிகளில் கீழ்க்கண்ட அடிப்படை வசதிகளை மேற்கொள்ளலாம்.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல்</td><td>600.00 இலட்சம்</td></tr>
<tr><td>2</td><td>நகர் பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி</td><td>1000.00 இலட்சம்</td></tr>
<tr><td>3</td><td>நகர் பகுதியில் பூங்கா மேம்பாடு பணி</td><td>500.00 இலட்சம்</td></tr>
<tr><td>4</td><td>புதியதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல், மேல்நிலை நீர்தேக்க தொட்டி பிரதான குழாய்</td><td>2000.00 இலட்சம்</td></tr>
</table></td>
<td>தீர்மானம் எண்.28<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அமைத்தல் நகர் முழுவதும் உள்ள பகிர்மான குழாய்கள் புதியதாக மாற்றம் செய்தல் | |
| 5 | நகர் பகுதியில் நெடுஞ்சாலையில் மின் விளக்குகள் அமைத்தல், சிறிய உயர் கோபுர விளக்குகள், பெரிய உயர் கோபுர விளக்குகள் அமைத்தல் பணி | 200.00 இலட்சம் |
| 6 | நகர் பகுதியில் தூய்மை பணியாளர்களுக்கு குடியிருப்பு அமைத்தல் | 700.00 இலட்சம். |
| | **மொத்தம்** | **5000.00 இலட்சம்** |

மேற்கண்ட அடிப்படை வசதிகள் நகர வளர்ச்சிக்கு அவசியம் என்பதால் மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துருக்கள் அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2014/2022/இ1**

---

**6**

பொள்ளாச்சி நகராட்சிக்கு மாண்புமிகு நகர நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் நகர் நிர்வாக மானிய கோரிக்கையில் நகராட்சிக்கு கீழ்க்கண்ட பணிகள் அறிவிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | நகராட்சியில் சி.டி.சி மேடு பகுதியில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கும் பணி. | 700.00 இலட்சம் |
| 2 | நகராட்சியில் சி.டி.சி மேடு பகுதியில் புதிய ஆம்னி பேருந்து நிலையம் அமைக்கும் பணி. | 200.00 இலட்சம் |
| 3 | நகராட்சியில் திரு.வி.கா மார்க்கெட்டில் புதிய அங்காடி அமைக்கும் பணி. | 320.00 இலட்சம் |
| 4 | நகராட்சியில் தேர்நிலை மார்க்கெட்டில் புதிய அங்காடி அமைக்கும் பணி. | 350.00 இலட்சம் |

**தீர்மானம் எண்.29**

1) **அனுமதிக்கப்பட்டது.**

2) **7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் செல்வி.க.நர்மதா ஆட்சேபனை (வ.எண்.6-10) தெரிவித்தார்.**

| | | |
|---|---|---|
| 5 | நகராட்சியில் காந்தி சந்தையில் புதியதாக மீன் அங்காடி அமைக்கும் பணி. | 250.00 இலட்சம் |
| 6 | நகராட்சியில் பாரத் நகர் பகுதியில் புதிய பூங்கா அமைத்தல். | 30.00 இலட்சம் |
| 7 | நகராட்சியில் சி.டி.சி காலனி பகுதியில் புதிய பூங்கா அமைத்தல். | 50.00 இலட்சம் |
| 8 | நகராட்சியில் அபிராமி ஆண்டாள் நகர் பகுதியில் புதிய பூங்கா அமைத்தல். | 40.00 இலட்சம் |
| 9 | நகராட்சியில் சேதுபதி நகர் பகுதியில் புதிய பூங்கா அமைத்தல். | 40.00 இலட்சம் |
| 10 | நகராட்சியில் சோமசுந்தரம் லே அவுட் பகுதியில் புதிய பூங்கா அமைத்தல். | 45.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **2025.00 இலட்சம்** |

மேற்படி பணிகளை நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி வைக்கவும், மேற்படி தொகையை அரசிடமிருந்து முழு மானியமாக பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2013/2022/இ1**